மானியம் வழங்கி, அவற்றை மற்ற பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், உள்நாட்டு மீனவர்கள் மீன்களை விற்பனை செய்ய மானிய விலையில் மொபட் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு மீனவர்களுக்கு ஒரு பொற்காலம் என்று சொல்லலாம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உள்நாட்டு மீனவர்கள் பரிசல் வாங்குவதற்கும், வலை பின்னுவதற்கும் 50 சதவிகித மானியம் வழங்குகிறார்கள். அதைப்போல உள்நாட்டு மீனவர்கள் இறால் மற்றும் மீன் பண்ணையிலே தொழில் மேற்கொள்ளும்போது aerator, generator வாங்குவதற்கு 50 சதவிகித மானியம் கொடுத்துக் கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். உள்நாட்டு மீனவர்கள் மீனைப் பிடித்தவுடன் உபயோகிப்பாளர்களே அதை வாங்கிக்கொள்கிறார்கள். எனவே, மீன் விற்பனை செய்ய 50 சதவிகித மானியத்தில் கொடுக்க இயலாது.

ஆக, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் (குறுக்கீடுகள்) பரிசலுக்கும், வலைக்கும் 50 சதவிகித மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, உள்நாட்டு மீனவர்கள் இறால் பண்ணையில் மீன் பிடிப்பதற்கு அந்த aerator, generator வாங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 50 சதவிகித மானியம் கொடுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

[2015 செப்டம்பர் 4

237—

வீட்டுமனைப் பட்டா

***47638—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, நெடுங்குடி ஊராட்சி, இராசாவயல் கிராமத்தில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், நெடுங்குடி ஊராட்சி, இராசாவயல் கிராமத்தில் புல எண்கள் 123/5, 124, 125, 126 மற்றும் 127/1 முதலிய மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலங்களிலே குடியிருந்துவரும் 21 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து, உரிய பிரேரணைகள் வருவாய் நிலை ஆணை எண் 21(6)-ன்படி சென்னை, நில நிருவாக ஆணையர் வழியாக அரசுக்குப் பெறப்பட்டவுடன், பயனாளிகளுக்கு மனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானத்தால் சிறந்த மறத்தமிழர், பூமிக்கு காலத்தாய் தந்திட்ட ஞானப் பெருங்கடலே, கடும் புயல், மழையையும், கயவர் கூட்டம் சுமத்திய பழியையும், கலிங்கத்துப் பரணியாக்கி, வென்றெடுத்த கம்பீரச் சிங்கமே, எங்கள் அம்மா அவர்களே. (மேசையைத் தட்டும் ஒலி)*

'தானே', சுனாமி என்னும் இயற்கை தொடுத்த போர்களையும் எதிர்கொண்டு மக்களை இமையாகக் காத்திட்ட எங்கள் தாயே; (மேசையைத் தட்டும் ஒலி) அரணே, அறமே, ஆலயமே, அஞ்சாமை,

2015 செப்டம்பர் 4]

அறிவூக்கம் இவையாவும் நெஞ்சத்தே நிறைந்து, வீரத்திற்கும், விவேகத்திற்கும் விலாசமாகிய வேதா நிலையத்து வேலுநாச்சியே, எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) நான் நாளும் வணங்குகிற அன்னையே, தங்கள் பொற்பாத மலர்களில் என் பணிவான புகழ்மாலையைச் சூட்டி, வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் மறுமலர்ச்சி கொண்டுவந்து, மக்கள் நல்வாழ்வு காணும் நலத் திட்டங்கள் தந்திடும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் திருமயம் தொகுதி, நெடுங்குடி ஊராட்சி, இராசாவயல் கிராமத்தில், மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் 21 குடும்பத்தினருக்கும், நிலத்தை வகைமாற்றம் செய்து, பட்டா வழங்கப்படும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் நல்லறிவிப்பிற்கு என் சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் இதயம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

238—

ஆவின் பாலகம்

***53882—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர்